# 10 உள்ளூராட்சி முறையினை அறிந்து கொள்வோம்

சனநாயக ஆட்சிமுறை காணப்படும் நாடுகளில் அரசாங்கங்களினால் மேற்கொள்ளப்பட வேண்டிய மக்கள் நலன்புரிச் சேவைகள் ஏராளம் உண்டு. பிரதேசங்களைச் சுத்தம் செய்தல், வீதிகளை அமைத்துப் பராமரித்தல், பொதுச் சுகாதார சேவைகளை நடைமுறைப்படுத்துதல் போன்றன அவற்றுள் சிலவாகும். இத்தகைய அத்தியாவசிய சேவைகளை மத்திய அரசாங்கம் நேரடியாகத் தலையிட்டு நிறைவேற்றுவது இலகுவான காரியமன்று. இதன் காரணமாக இச்சேவைகளை நிறைவேற்றக்கூடிய மக்களுக்கு நெருக்கமான நிர்வாக ஆட்சி அலகு ஒன்று அத்தியாவசியமானதாகும். மக்களின் நலனை நோக்கமாகக் கொண்டு மத்திய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களையும், கொள்கைகளையும் மக்களின் பங்களிப்பைப் பெற்றுச் செயற்படுத்துவதற்காக நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள அமைப்புக்கள் உள்ளூராட்சி நிறுவனங்கள் என அழைக்கப்படுகின்றன. அந்த வகையில் நீங்கள் இவ்வத்தியாயத்தைக் கற்பதன் மூலம் உள்ளூராட்சி மன்றங்களின் பணிகள், சேவைகள், அவை தொடர்பான பிரஜைகளின் பொறுப்புக்கள் மற்றும் எமது நாட்டில் உள்ளூராட்சி அமைப்புக்கள் செயற்படும்முறை ஆகியன பற்றி அறிந்து கொள்ளலாம்.

## 10.1 உள்ளூராட்சி நிர்வாக முறையை அறிவோம்

உள்ளூராட்சி நிர்வாகம் என்னும் அம்சம் இலங்கைக்கு ஒரு புதிய அனுபவமன்று. புராதன காலம் முதலே இலங்கையில் பல்வேறு உள்ளூராட்சி அமைப்பு முறைகள் செயற்பட்டு வந்துள்ளமைக்குத் தக்க சான்றுகள் காணப்படுகின்றன. கி.மு 3ஆம் நூற்றாண்டில் அநுராதபுரத்தை ஆட்சிசெய்த பண்டுகாபய மன்னன் உள்ளூராட்சி நிர்வாக அமைப்பை ஏற்படுத்தியிருந்ததாக வரலாற்று நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. கிராம சபை முறையும் ஓர் உள்ளூராட்சி முறையாக அக்காலத்தில் இருந்து வந்துள்ளது.

கண்டி இராச்சியக் காலத்தில் கிராம சபை, நாட்டுபுறச்சேவை, (ரட்டசபா) கோரளை போன்ற பிரிவுகள் இருந்து வந்துள்ளன.




இலவச பாடநூல் விநியோகத்திற்காக

**இலங்கை உள்@ராட்சி வரலாறு**

| காலப்பகுதி | செயற்பட்ட உள்@ராட்சி நிறுவனங்கள் |
|---|---|
| அநுராதபுரக் காலம் | ★ கிராம சபை |
| கண்டி இராச்சிய காலம் | ★ கிராமசபை, நாட்டுப்புறச்சபை, கோரளை, திசாவை, முகாந்திரம் |
| பிரித்தானியர் காலம் | ★ 1865இல் நகரசபைச் சட்ட மூலம் (ரட்ட சபை) கொழும்பு, கண்டி மாநகரசபைகளை நிறுவல்<br>★ 1871இல் கிராம செயற்பாட்டுச் சபை சட்டம் மூலம் கிராம செயற்பாட்டுச் சபைகளை நிறுவல்<br>★ 1892இல் சிறு நகர சட்டமூலம் மூலமாக சிறு நகரசபைகளை நிறுவுதல்<br>★ 1920 மாவட்ட சபை முறையைச்செயற்படுத்தல்<br>நகர மாவட்ட சபை<br>சாதாரண மாவட்ட சபை<br>கிராமிய மாவட்ட சபை<br>★ 1946இல் பட்டின சபைச் சட்டத்தைச்செயற்படுத்தல் |
| சுதந்திரத்திற்குப் பிந்திய காலம் | ★ 1980இல் மாவட்ட அபிவிருத்தி சபைச் செயற்றிட்டம் (இதன் மூலம் கிராம சபை, சிறு நகர சபை நீக்கம்)<br>★ 1981இல் பிரதேச மன்றம் கிராமோதய மன்றம் செயற்படல்<br>★ 1987இல் பிரதேச சபை சட்டமூலம் |

சனநாயக ஆட்சிமுறையினுள் மத்திய அரசாங்கத்தின் ஆட்சிநிர்வாகப் பணிகளை மிகவும் இலகுவாக மேற்கொள்வதற்கும், நலன்புரி நடவடிக்கைகளை மக்களின் தேவைகளுக்கேற்ப அவர்களுக்கு நெருக்கமாகக் கொண்டு செல்வதற்குமாக இயங்கக்கூடிய சட்டபூர்வமான அமைப்பாக உள்@ராட்சி முறை காணப்படுகின்றது.

குறித்த நிர்ணயிக்கப்பட்ட பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டு மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பிரதேச மக்களின் பங்குபற்றலுடன் மக்களின் பொதுத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு உள்@ராட்சி மன்றங்களின் மூலம் முடிகிறது. இதன்படி மத்திய அரசாங்கத்தின் பணிகளைப் பிரதேச மக்களுக்கு இலகுவாகக் கொண்டு சேர்க்கின்ற ஒரு பொறிமுறை என்றவகையில் உள்@ராட்சி நிர்வாகமுறை முக்கியத்துவம் பெறுகிறது.




## பதுளை மாவட்டத்துக்கான உள்ளூராட்சிப் பிரதேசம்


1. மகியங்கனை
2. ரிதிமலியட
3. மீஹகிவுல
4. கந்தகெட்டிய
5. சொரனதொட்ட
6. பதுளை மாநகர சபை
7. பதுளை பிரதேசச் செயலகப்பிரிவு
8. பசறை
9. ஹாலி எல
10. ஊவா பரணகம
11. வெலிமட
12. எல்லா
13. பண்டாரவளை நகரசபை
14. பண்டாரவளை பிரதேசச் செயலகப்பிரிவு
15. அப்புத்தளை நகர சபை
16. அப்புத்தளை பிரதேசச் செயலகம்
17. கல்குழல்ல



மேலே காட்டப்பட்டுள்ள உள்@ராட்சி மன்றங்களின் தேசப்படத்தை அவதானிக்கும் போது, இலங்கையை நிர்வாக மாவட்டங்களாகப் பிரித்து, அவ்வொவ்வொரு நிர்வாக மாவட்டமும் உள்@ராட்சி அமைப்புக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள முறையை நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

தற்போது இலங்கையில் மத்திய அரசாங்கத்தால் ஏற்படுத்தப்படும் உள்@ராட்சி மன்றங்கள் மாகாண சபை அரசாங்கங்களின் மேற்பார்வை, கட்டுப்படுத்தலின் கீழும் செயற்படுகின்றன. இவை பிரதேசங்களின் தேவைகள் தொடர்பாக முன்னுரிமை வழங்கிச் செயற்படுகின்றன. உள்@ராட்சி அதிகார சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் தேவைப்படின் திரும்பப் பெற்றுக் கொள்ளும் அதிகாரம் மாகாணங்களுக்கும், மத்திய அரசாங்கத்துக்கும் உண்டு. உள்@ராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரப் பரவலாக்கங்களை கீழே தரப்பட்டுள்ள உருவை அவதானிப்பதன் மூலம் விளங்கிக் கொள்ள முடியும்.

## உள்@ராட்சி மன்றங்களின் அதிகாரப் பரவலாக்கம்




10.2 வரைபடம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அதிகாரங்கள் வழங்கல்

தற்போது இலங்கையில் செயற்படும் முக்கிய உள்@ராட்சி நிறுவனங்களாக மாநகரசபைகள், நகரசபைகள் மற்றும் பிரதேச சபைகள் ஆகிய மூன்று வகை அமைப்புக்கள் காணப்படுகின்றன. உள்@ராட்சி மன்றங்களை உருவாக்குதல், அவற்றுக்குரிய அதிகாரங்களை அளித்தல், இவற்றிற்குரிய தேர்தல்களை நடத்துதல், ஆகியன மத்திய அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டங்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. ஆரம்பத்தில் உள்@ராட்சி மன்றங்கள் மீதான அதிகாரம் மத்திய அரசாங்கத்துக்கே இருந்தாலும் 1987ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட 13ஆவது அரசியல் யாப்புத் திருத்தச் சட்டம் மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

உள்@ராட்சி மன்றங்கள் மத்திய அரசாங்கத்தின் கட்டளைகளையும், மாகாணசபையிடமிருந்து வரும் கட்டளைகள் மற்றும் செயற்றிட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதற்குக் கடமைப்பட்டுள்ளன.

**உள்@ராட்சி அமைப்புக்களை நிறுவுவதன் மூலம் கிடைக்கப்பெறும் பயன்கள்.**

சனநாயகத்தை உறுதி செய்வதற்கும் ஆட்சி நிர்வாகத்தில் மக்கள் சுதந்திரமாகப் பங்கு பற்றுவதற்கும் உள்@ராட்சி முறை மூலம் வாய்ப்புக் கிடைக்கின்றது. உள்@ராட்சி மன்றங்கள் செயற்படும் பிரதேசம் குறுகியதாக இருப்பதனால் அங்கு வாழும் மக்களின் தேவைகளைக் கண்டறிந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இதன் மூலம் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. மக்கள் தமது தேவைகள் குறித்து அவதானத்துடன் இருந்து தமது செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் இதன்மூலம் முடிகிறது.

## 10.2 உள்ளூராட்சி முறையின் முக்கியத்துவம்

நாளுக்குநாள் சமூகத்தில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை எளிமையாகவும், உரியவகையிலும் தீர்த்துக் கொள்வதற்கும், மக்களின் அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் உள்@ராட்சி மன்றங்கள் மூலம் முடியும்.உள்@ராட்சி மன்றங்கள் பின்வரும் பணிகளை நிறைவேற்றுவதில் தொடர்புபட்டிருப்பதால் அவை முக்கியத்துவம் பெறுகின்றன.

**உள்@ராட்சி மன்றங்களின் தேவை**

- மத்திய அரசாங்கத்தின் மக்கள்சேவைகளையும், திட்டங்களையும் முறையாகவும்,வெற்றிகரமாகவும் நடைமுறைப்படுத்துவதற்கு உதவுதல்.
- பிரதேசங்களின் மக்கள் தொகுதியினரில் ஒரு குறிப்பிட்டளவு இளைஞர் யுவதிகளை ஆட்சிநிர்வாகத்தில் பங்குபற்றச் செய்தல்.
- அரசாங்கத்தின் கொள்கைகளைப் பிரதேசத் தேவைகளுடன் பொருந்தக் கூடிய வகையில் நடைமுறைப்படுத்துதல்.
- சமூகப் பொதுநல சேவைகளைமக்களுக்கு இலகுவாகப் பெற்றுக்கொடுத்தல்.
- உள்@ராட்சிப் பிரதேசத்தினுள் அபிவிருத்தி நடவடிக்கைகள், பராமரிப்பு நடவடிக்கைகள் என்பவற்றை முறையாகவும் வெற்றிகரமாகவும் செயற்படுத்துதல்.
- தேசியக் கொள்கைகளைத் தயாரிக்கும்போது பிரதேசத்தேவைகள் குறித்து அரசுக்கு விளக்கமளித்தல்.
- திடீர் அனர்த்தம் மற்றும் விபத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களின் போது அர்ப்பணிப்புடன் மக்களுக்கு உதவுதல்.



10.3 பிரதேச மக்கள் உதவியுடன் பாதையொன்றைப் புனரமைக்கும் படம்



10.4 தீயணைப்புப் பிரிவு - நடவடிக்கையில் ஈடுபடும் காட்சி

**செயற்பாடு I**

நீங்கள் வசிக்கும் பிரதேசத்திற்குப் பொருத்தமான உள்ளூராட்சி மன்றத்தைப் பெயரிட்டு அவற்றின் மூலம் என்னென்ன பணிகள் நிறைவேற்றப்படுகின்றன என்பது பற்றிய தகவல்களைத் தேடியறிந்து பட்டியலொன்றைத் தயாரியுங்கள்.

## 10.3 உள்ளூராட்சியுடன் தொடர்புடைய நிறுவனங்கள்

இலங்கையில் உள்ளூராட்சியுடன் தொடர்புடைய மூன்று வகையான நிறுவனங்கள் காணப்படுகின்றன என மேலே கண்டிருப்பீர்கள். பின்வரும் அட்டவணையை அவதானிப்பதன் மூலம் இப்போது இலங்கையில் செயற்படும் உள்ளூராட்சி மன்றங்கள் பற்றிய விபரங்களை அறியலாம்.

| உள்ளூராட்சி நிறுவனங்கள் | மன்றங்களின் எண்ணிக்கை (2009 இருந்து) | தற்போதுள்ள சட்ட ஏற்பாடு |
|---|---|---|
| மாநகர சபை | 18 | 1988இல் மாநகர சபைகள் திருத்தச் சட்டமூலம் |
| நகர சபை | 42 | 1988இல் நகர சபைகள் திருத்தச் சட்டமூலம் |
| பிரதேச சபை | 270 | 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் |



10.5 பதுளை மாநகர சபை

10.6 பதுளை மாநகர சபை உத்தியோக பூர்வ இலட்சினை



10.7 கொழும்பு மாநகர சபை

10.8 கொழும்பு மாநகர சபையின் உத்தியோக பூர்வ இலட்சினை

**நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியன :**

உள்@ராட்சி அமைப்புக்களின் எல்லைகளை வரையறுத்து அமைக்கும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்

உள்@ராட்சி நிறுவனங்களின் எல்லைகளைத் தீர்மானித்தல், அதற்கு உத்தியோகப் பெயர் ஒன்றை வழங்குதல், வர்த்தமானியில் பிரகடனப்படுத்துதல், உள்@ராட்சி அமைப்பு உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல் ஆகியன மத்திய அரசாங்கத்தின் உள்@ராட்சிக்குப் பொறுப்பான அமைச்சரால் மேற்கொள்ளப்படுகின்றன.

உள்@ராட்சி மன்றங்களை அமைக்கும்போது பின்வரும் விடயங்கள் மீது கவனம் செலுத்தப்படுகின்றது.

- ♦ பிரதேசத்தில் வாழும் மக்கள் தொகை
- ♦ பிரதேச நிலப்பரப்பு அளவு

- பிரதேசத்தின் தரைத்தோற்ற இயல்பு
- பிரதேசத்தின் அபிவிருத்தி மட்டம்
- பிரதேசத்திலுள்ள வசதி வாய்ப்புக்கள்
- நகரசபை அல்லது மாநகர சபையாயின் அப்பிரதேசம் நாகரிகமடைந்துள்ளவிதம்

1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்கச் சட்டத்திற்கு அமைய நிறுவப்பட்டுள்ள பிரதேச சபைகளின் நிர்வாக எல்லையானது கிட்டத்தட்ட **"பிரதேச செயலகங்களின்"** எல்லைகளுக்குச் சமனானதாகும்.

ஒரு குறித்த பிரதேசத்தினுள் ஒரு மாநகரசபையோ அல்லது ஒரு நகரசபையோ செயற்படுமாயின் அதன் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசம் தவிர்ந்த எஞ்சியுள்ள பிரதேசம் பிரதேச சபையாகப் பிரகடனம் செய்யப்படுகின்றது. உதாரணமாக புத்தளம் பிரதேச செயலகப் பிரிவினுள் அமைந்துள்ள "புத்தளம் நகரசபை" அதிகாரப் பிரதேசம் தவிர்ந்த மீதமுள்ள பகுதி "புத்தளம் பிரதேச சபை" க்கு உட்பட்ட பிரதேசமாக விளங்குகிறது.

1865ஆம் ஆண்டு கொழும்பிலும் , 1866இல் கண்டி, காலி நகரங்களிலும் நகரசபைச் சட்டத்தின்கீழ் மாநகர சபைகள் நிறுவப்பட்டன.

முன்பு பட்டினசபைகள், கிராமசபைகள் ஆகியனவும் உள்@ராட்சி அமைப்பில் காணப்பட்டன. 1980ஆம் ஆண்டு இவை நீக்கப்பட்டு மாவட்ட அபிவிருத்தி சபைகள் ஏற்படுத்தப்பட்டன. இவை 1988இல் மறுசீரமைக்கப்பட்டு தற்போதைய உள்@ராட்சி அமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டன.

ஆரம்பத்தில் பிரதேச சபையாக ஆரம்பமாகும் உள்@ராட்சி அலகை காலப்போக்கில் நகர சபையாகவும், பின்பு மாநகர சபையாகவும் தரமுயர்த்திப் பிரகடனம் செய்வதற்குரிய அதிகாரம் மத்திய உள்@ராட்சி அமைச்சருக்கு உண்டு.

## 10.4 உள்ளூராட்சி நிறுவனங்களுக்குப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்தல

இலங்கையில் சகல உள்@ராட்சி நிறுவனங்களும் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டே செயற்படுகின்றன. அவர்கள் மக்கள் வாக்குகளின் மூலம் காலத்திற்குக் காலம் தெரிவு செய்யப்படுகின்றனர். இவற்றுக்கான தேர்தல்கள் தேர்தல் ஆணையாளரினால் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு தடவை நடத்தப்படுகின்றன.

உள்@ராட்சிமன்றத் தேர்தல்களுக்கு விகிதாசாரப் பட்டியல் பிரதிநிதித்துவ முறை பயன்படுத்தப்படுகிறது.

தேர்தலுக்கு முன்னர், வேட்புமனுத் தாக்கல் செய்யவேண்டிய திகதியைத் தீர்மானித்தல், தேர்தல் தினத்துக்கான திகதியைத் தீர்மானித்தல், தேர்தல் ஒழுங்குகள் மற்றும் தேர்தலுக்கான ஏற்பாடுகளைச் செய்தல் முதலியன தேர்தல்கள் ஆணையாளரினால் மேற்கொள்ளப்படுகின்றன. தேர்தலில் அரசியல் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன.

உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறும் வழிமுறை குறித்து தகவல் திரட்டுமாறு தரம் 9ஐச் சேர்ந்த மாணவர்களுக்கு குழுச் செயற்பாடு ஒன்று பாட ஆசிரியரால் ஒழுங்கு செய்யப்பட்டது. அதில் மாணவர் குழுக்களால் திரட்டப்பட்ட தகவல்கள், கலந்துரையாடல் மூலம் முன்வைக்கப்பட்ட விடயங்கள் வருமாறு.

**அர்ஜுனின் குழுவினர்:**

**அர்ஜுன்** :- எமது குழுவிற்கு உள்ளூராட்சித் தேர்தலில் வேட்பாளர் நியமனப்பத்திரம் தாக்கல் செய்யும் முறைபற்றிய விடயம் ஒப்படைக்கப்பட்டது. அதன்படி உள்ளூராட்சித் தேர்தலுக்கு பட்டியல் மூலம் தயாரித்த வேட்பாளர் நியமனப் பத்திரமே தாக்கல் செய்ய வேண்டும்.

**ஆசிரியர்** :- அப்படியானால் எல்லாத் தேர்தல்களிலும் ஒரேயளவு பட்டியல்தானா தயாரிக்கப்படுகிறது?

**அர்ஜுன்** :- இல்லை! இல்லை!! தேர்தலுக்குத் தேர்தல் அது மாற்றமடையலாம். அதனை உள்ளூராட்சி அமைச்சர் தான் தீர்மானிப்பார்.

**ஆசிரியர்** :- சரி மாணவர்களே! ஓர் உள்ளூராட்சி அமைப்புக்கு அமைச்சர் தீர்மானிக்கும் எண்ணிக்கையானவர்களா வேட்பாளர் மனுச் செய்யனும்?

**அகிலன்** :- இல்லை சேர்! ஒரு உள்ளூராட்சி நிறுவனத்துக்குத் தெரிவு செய்யப்பட வேண்டிய பிரதிநிதிகள் எண்ணிக் கைக்கு மேலதிகமாக , ஆறு பேர்களோ அல்லது தெரிவு செய்ய வேண்டியவர்களுள் 1/3 பங்கு அதிகமானவர்களோ இவற்றில் எது குறைவானதோ அவர்களையும் சேர்த்துப் பட்டியல் தாக்கல் செய்ய வேண்டும். உதாரணமாக தெரிவு செய்யப்படவேண்டிய உறுப்பினர்கள் 24 ஆயின் வேட்புமனு நியமனப் பத்திரத்தில் 30 பேர்கள் போட்டியிட வேண்டும்.

**ஆசிரியர்:-** வேட்பாளர் நியமனப் பத்திரம் தொடர்பான மற்றுமொரு விதியை ருசித்திரா உங்களால் சொல்ல முடியுமா?

**ருசித்திரா:-** ஆம் சேர்! பட்டியலில் சேர்த்துக் கொள்கின்றவர்களுள் 40%ஆனோர் 18 வயதுக்கும் 35 வயதுக்கும் உட்பட்ட வர்களாக இருக்க வேணும். இளைஞர்களை ஆட்சி நடவடிக்கையில் பங்குபற்றவைப்பதற்காக இது பின்பற் றப்படுகின்றது.

**ஆசிரியர்:-** நல்லது! உங்கள் குழுவைச் சேர்ந்த சஹீகா என்ன சொல்லபோகிறார்? ..........கூறுங்கள்......!

**சஹீகா :-** அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிமூலம் வேட்பு நியமனப்பத்திரம்கொடுப்பதாயின் அக்கட்சியின் செயலாளரும் சுயேச்சைக்குழுவானால் அக்குழுவின் தலைவரும் விண்ணப்பத்தில் உறுதிசெய்து ஒப்பமிட்டிருக்க வேண்டும். அத்துடன் சமாதான நீதவான் ஒருவரோ அல்லது சட்டத்தரணி ஒருவரோ அதில் கையொப்பம் இட்டிருக்க வேண்டும்.

**நிலோஜன்:-** தேர்தலில் போட்டியிடுவதற்குக் கட்டுப் பணம்செலுத்த வேண்டும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். உண்மை தானா..?

**சம்பா :-** ஆம். நிச்சயமாக! கட்சிகளில் போட்டியிட்டால் கட்டணம் செலுத்தத் தேவையில்லை. சுயேச்சைக்குழுவாயின் கட்டுப்பணம் செலுத்தவேணும். நகரசபை, மாநகரசபைக்கு அல்லது பிரதேச சபை ஒன்றுக்கு போட்டியிடுவதாயின் ஒருவருக்கு 250/= ரூபா வீதம் கட்டுப்பணம் செலுத்த வேண்டும்.

தேர்தலில் எந்தவொரு உறுப்பினரும் தெரிவாகவில்லையாயின் அல்லது கட்சி பெற்ற வாக்குகள் 1/20 பங்கிலும் குறைவாயின் கட்டுப்பணம் அரசுக்குச் சொந்தமாகிவிடும்.

**ஆசிரியர்:-** ஆம் மாணவர்களே! வேட்பாளர் மனுவைத் தாக்கல் செய்வது தொடர்பாக மற்றொரு விடயமும் உள்ளது. அதுதான் வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டபின் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு விருப்பு இலக்கங்கள் வழங்குவதாகும். அதாவது சிங்கள அகரவரிசை ஒழுங்கின்படி வேட்பாளர்களின் பெயர்கள் வரிசைப் படுத்தப்பட்டு விருப்பு இலக்கங்கள் வழங்கப்படுகிறது.

**அம்லான் குழுவினர்**

**அம்லான்** :- எங்கள் குழுவிற்கு உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களிப்பது எப்படி? என்பது பற்றிய விபரங்களைத் திரட்டுமாறு கூறப்பட்டது. தேர்தல் தினத்தில் வாக்காளர் ஒவ்வொருவரும் வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று வாக்களிக்கலாம். தேர்தல் சட்டதிட்டங்களுக்கு அமைய தேர்தல்கள் ஆணையாளரால் வாக்கெடுப்பு நடத்தப் படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| வாக்குச்சீட்டு இல. | உண்மைக் கட்சி | ★ | |
| | நன்மைக் கட்சி | ■ | |
| | மக்கள் கட்சி | ♦ | |
| | சுயேட்சை குழு 1 | ● | |
| | சுயேட்சை குழு 2 | □ | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | | 8 | | |
| 2 | | | 9 | | |
| 3 | | | 10 | | |
| 4 | | | 11 | | |
| 5 | | | 12 | | |
| 6 | | | 13 | | |
| 7 | | | 14 | | |

உள்ளூராட்சித் தேர்தலின்போது வழங்கப்படக்கூடிய மாதிரி வாக்குச் சீட்டு கீழே தரப்பட்டுள்ளது.

வாக்களிக்கும் போது முதலில் தாம் விரும்பும் கட்சி அல்லது சுயேச்சைக்குழுவின் சின்னத்திற்கு எதிரேயுள்ள கூட்டில் புள்ளடி (X) இட்டு வாக்களிக்க வேண்டும். அதன் பின்பு மூன்று விருப்பு வாக்குகளை அளிக்க முடியும்.

விதுனி :- மூன்று விருப்பு வாக்குகளையும் ஒரே வேட்பாளருக்கே போடலாம் தானே?

நிஷாந்தன் :- ஆம்! நிச்சயமாக! மூன்று விருப்பு வாக்குகளையும் ஒருவருக்குப் போடலாம். இல்லாவிட்டால் இருவருக்கோ அல்லது மூவருக்கும் பகிர்ந்து வாக்களிக்கலாம். விருப்பு வாக்குகளைப் போடாது கட்சிக்கு மட்டும் வாக்களித்தால் அவ்வாக்கு கட்சிக்கு மட்டும் செல்லுபடியாகும்.

அரசியல் கட்சிகள் அல்லது சுயேச்சைக்குழுக்களில் ஒன்றுக்கு மேற்பட்டவற்றுக்கு வாக்களித்தாலும் அல்லது மூன்று விருப்பு வாக்குகளுக்கு அதிகமாக வாக்களித்தாலோ முறையே வாக்கும், விருப்பு வாக்குகளும் செல்லுபடியற்றதாகிவிடும்.

**செவ்வந்தியின் குழுவினர்**

**செவ்வந்தி** :-தேர்தலுக்குப் பிறகு வெற்றிபெறுபவர்கள் தெரிவு செய்யப்படும் முறை பற்றிய விபரங்களைத் திரட்டி ஆராயுமாறு எமது குழுவுக்கு பொறுப்பளிக்கப்பட்டது.

**லவன்** :- முதலாவதாக, அந்தந்த அரசியல் கட்சிகளுக்கும், சுயேச்சைக்குழுக்களுக்கும் கிடைத்த வாக்குகள் எண்ணிக்கை கணக்கிடப்படும். இதன் பிறகு விருப்பு வாக்குகள் கணக்கிடப்படும்.

குறிப்பிட்ட உள்@ராட்சி மன்றத்துக்கான தேர்தலில் அதிக வாக்குகளைப் பெற்ற கட்சி அல்லது சுயேச்சைக்குழுவுக்கு முதலில் இரண்டு ‘போனஸ்’ ஆசனங்கள் ஒதுக்கப்படும். பிறகு தேர்தலில் செல்லுபடியான மொத்த வாக்கான ‘குறித்த வாக்குகளின் எண்ணிக்கையைக் கொண்டு மற்றைய ஆசனங்கள் கட்சிகளுக்கு ஒதுக்கப்படுகிறது.

**ஹகீம்** :- ஏன் “குறித்த வாக்குகளின் எண்ணிக்கை” முக்கியமானது?

**சாலிகா** :- “குறித்த வாக்குகளின் எண்ணிக்கை” யிலிருந்துதான் பூர்த்திசெய்ய வேண்டிய வாக்குகளின் எண்ணிக்கை “கணக்கிடப்படுகிறது. அதாவது செல்லுபடியான மொத்த வாக்குகள் குறித்த உள்@ராட்சி சபைக்குத் தெரிவு செய்யப்பட வேண்டிய ஆசனங்களின் இரண்டிற்குக் குறைந்த எண்ணிக்கையால் பிரிக்கப்படும். இதன்போது கிடைக்கும் வாக்கு எண்ணிக்கை பூர்த்தி செய்யவேண்டிய வாக்குகளின் எண்ணிக்கை” என அழைக்கப்படுகிறது.

**நிக்ஷன்** :- பூர்த்திசெய்யவேண்டிய வாக்கு எண்ணிக்கையைக் கணித்த பின்பு என்ன செய்ய வேண்டும்?

**சாரங்கி** :- பூர்த்தி செய்யவேண்டிய வாக்கு எண்ணிக்கையைக் கொண்டு அந்தந்த அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்குக் கிடைக்கும் ஆசனங்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுகிறது.

அதற்காக ஒவ்வொரு கட்சியும், சுயேச்சைக் குழுவும் பெற்றுக்கொண்ட வாக்குகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய வாக்குகளால் பிரித்தல் வேண்டும். இதன் பின்பு அந்த உள்ளூராட்சி சபைக்குத் தெரிவு செய்யப்பட வேண்டிய ஆசனங்கள் மீதிருப்பின் கூடுதலான மிகுதி வாக்குகளைக் கொண்டுள்ள கட்சிகளுக்கு அவை பகிர்ந்தளிக்கப்படும்.

**ஆசிரியர்** :- நல்லது! பிள்ளைகளே! உதாரணம் ஒன்றின் மூலம் இச்செயற்பாட்டைத் தெளிவாக விளக்கிக் காட்டுவதற்கு உங்களால் முடியுமா?

**அம்லான்** :- ஆம் சேர்! இவற்றை கீழ்வரும் உதாரணம் மூலம் விளக்கிக் காட்டலாம்.

| கட்சி | பெற்ற வாக்குகள் |
|---|---|
| உண்மைக் கட்சி | 2549 |
| நன்மைக் கட்சி | 2448 |
| மக்கள் கட்சி | 262 |
| சுயேட்சைக் குழு I | 174 |
| சுயேட்சைக் குழு II | 29 |

அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் - 5748
நிராகரிக்கப்பட்டட வாக்குகள் - 286
செல்லுபடியான மொத்த வாக்குகள் - 5462
தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை - 09 ஆகும்.

இங்குள்ள முடிவுகளின்படி அதிக வாக்குகளைப் பெற்றுக்கொண்ட "உண்மைக் கட்சிக்கு 02 போனஸ் ஆசனங்கள் கிடைக்கும்.

மீதியாயுள்ள 7 ஆசனங்கள் குறித்த செல்லுபடியான மொத்த வாக்குகளின் எண்ணிக்கைப்படி கட்சிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.

குறித்த வாக்குகளின் எண்ணிக்கை - 5462
பூர்த்தி செய்யவேண்டிய வாக்குகளின் எண்ணிக்கை $= 5462 \div 7$
$= 781$

இதனை வைத்து ஒவ்வொரு கட்சிக்கும் கிடைக்கவேண்டிய ஆசனங்களின் எண்ணிக்கை பின்வருமாறு தீர்மானிக்கப்படும்.

| கட்சிகள் | பெறப்பட்ட வாக்குகள் | பெறப்பட்டஉறுப்பினர் எண்ணிக்கை | மீதி |
|---|---|---|---|
| உண்மைக் கட்சி | 2549 ÷ 781 | 3 | 206 |
| நன்மைக் கட்சி | 2448 ÷ 781 | 3 | 105 |
| மக்கள் கட்சி | | | 262 |
| சுயேட்சை குழு I | | | 174 |
| சுயேட்சை குழு II | | | 29 |

- இதன்படி உண்மைக் கட்சிக்கு 2 போனஸ் உட்பட கிடைக்கப்பெறும் மொத்த ஆசனங்கள் 05 ஆகும்.
- நன்மைக் கட்சிக்குக் கிடைக்கப்பெறும் ஆசனங்கள் 03 ஆகும்.
- ஆகவே இதுவரை 08 ஆசனங்கள் பகிரப்பட்டுள்ளன. 01 ஆசனம் மிகுதியுள்ளது. அந்த ஆசனம் கட்சிகளின் எஞ்சியுள்ள மீதி வாக்குகளில் அதிக வாக்குகளையுடைய மக்கள் கட்சிக்கு ஒதுக்கப்படும்.
- இதன்பிறகு கட்சிகள் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கு கிடைத்த விருப்பு வாக்குகள் எண்ணப்படும். அவர்கள் பெற்ற விருப்பு வாக்கு மொத்த எண்ணிக்கைக்கு ஏற்ப வெற்றிபெற்ற பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவர்.

**தர்ஷினி** :- நகரபிதா, பிரதேச சபைத் தலைவர் பதவிகளுக்கு எவ்வாறு உறுப்பினர்கள் நியமிக்கப்படுகின்றார்கள் என்று சொல் லுவீர்களா?

**நபீல்** :- ஆம்! சொல்லமுடியும். மாநகரசபையாயின் மாநகர பிதாவும், துணைமாநகரபிதாவும் நகர சபை அல்லது பிரதேச சபையாயின் தலைவரும் துணைத்தலைவரும், அந்தந்த உள்ளூராட்சிப் பிரிவில் வெற்றிபெற்று கூடுதலான ஆசனங்களைப் பெற்றுக் கொண்ட கட்சி அல்லது சுயேச்சைக்குழுவிலிருந்து அதன் தலைவர்களால் நியமிக்கப்படுகின்றனர்.

உள்ளூராட்சி மன்றம் ஒன்றினது பதவிக்காலம் 4 ஆண்டுகளாகும். ஆகவே அவற்றின் உறுப்பினர்களும் 4 வருடங்கள் பதவி வகிப்பர்.

**செயற்பாடு II**

பாட ஆசிரியரின் ஒத்துழைப்புடன் மாணவர்கள் பங்குபற்றும் தேர்தல் ஒன்றை வகுப்பறையில் நடாத்திக் காட்டுங்கள்.

## 10.5 உள்ளூராட்சி நிறுவனங்களின் அமைப்பு, மற்றும் அதிகாரங்களும் பணிகளும்

**மாநகரசபை**

ஆலோசனைக் குழு
1. வாகனங்கள் செயற்படுத்தும் குழு
2. வீதிகள் பெயரிடும் குழு
3. நூலக ஆலோசனைக் குழு
4. சுற்றாடற் குழு

நகர பிதா
↓
துணை நகரபிதா
மகாநகர சபை உறுப்பினர்
↓
மாநகர சபை ஆணையாளர்
↓
ஏனைய உத்தியோகத்தர்கள்

நிலையியற் குழுக்கள்
1. நீதிக் குழு
2. சுகாதார, வியாபார நிலையங்கள்
3. கைத்தொழில் குழு
4. ஆயுர்வேத பொது நலனோம்பல் நிறைவேற்றுக்குழு

**பிரதேசசபை / நகரசபை**

துணைத்தலைவர்
உறுப்பினர்கள்

தவிசாளர்
↓
செயலாளர்
↓
ஏனைய உத்தியோகத்தர்கள்

குழுக்கள்
1. கைத்தொழிற் சேவைக் குழு
2. வீடு, சேவை சமூகக் குழுக்கள்
3. சுற்றாடல் வசதிகள்குழு
4. நிதிக்குழு

ஒவ்வொரு உள்@ராட்சி நிறுவனத்தினதும் அமைப்பினை மேலுள்ள வரைபிலிருந்து உங்களால் அறிந்து கொள்ள முடியும். மாநகரசபையொன்றின் அமைப்பு, நகரசபை அல்லது பிரதேசசபை ஒன்றின் அமைப்பினை விட சிக்க லானதாகும். பிரதான பதவிப் பெயர்களிலும் வேறுபாடுகளுண்டு. உதாரணமாக மாநகர சபையொன்றின் பிரதான நிறைவேற்று அதிகாரியாக மாநகர பிதா விளங்குகிறார். ஆனால் பிரதேச சபை ஒன்றில் அல்லது நகர சபை ஒன்றில் அப்பதவி “தவிசாளர்” என அழைக்கப்படுகிறது.

மாநகரசபை ஒன்றில் துணை மாநகரபிதா பதவி காணப்படும் அதேவேளை நகர சபையிலும் பிரதேச சபையிலும் அது “துணைத்தவிசாளர்” என வழங்கப் படுகிறது. மாநகர, நகர சபைகளில் நிரந்தரமாக நிர்வாகத்தை மேற்கொள்ளும் ஆணையாளர் பதவி காணப்படும்போது பிரதேச சபைகளில் அப்பதவி “செயலாளர்” ஒருவரால் நிறைவேற்றப்படுகிறது. மேலும் உள்@ராட்சி சபைப் பதவிகளில் காணப்படும் வேறுபாடுகளை விளங்கும்பொருட்டு உங்களது பாடசாலைக்கு அண்மையிலுள்ள உள்@ராட்சி மன்றத்துக்கு உங்கள் ஆசிரியரின் ஒத்துழைப்புடன் சென்று பார்வையிட முயற்சியுங்கள்.

மாநகரசபையாயின் மாநகரபிதாவும், நகர சபை அல்லது பிரதேச சபையாயின் தவிசாளரும் பிரதான நிறைவேற்று அதிகாரிகளாக விளங்குகின்றனர். உரிய சட்டங்களின் மூலம் அவர்களுக்கு பின்வரும் அதிகாரங்கள் காணப்படுகின்றன.

- ♦ சபையின் கூட்டத்தொடரை தொடங்குதல் மற்றும் ஒத்திவைத்தல்.
- ♦ சபை நடவடிக்கைகளுக்கு தலைமை வகித்தல்.
- ♦ மக்கள் பயன்பாட்டுக்கான சேவைகளை வழங்குவதற்கு முன்னிறுத்தல்

நகரபிதா அல்லது தவிசாளர் சமூகமளிக்காத சந்தர்ப்பங்களில் சபைக்கு துணை நகரபிதா அல்லது துணைத்தவிசாளர் ஆகியோர் தலைமை வகிப்பர். குறித்த உள்@ராட்சி மன்றம் அமைந்துள்ள மாவட்டத்தின் சமாதான நீதவான் பதவியும், உத்தியோகப் பற்றற்ற மஜிஸ்றரேட் நீதிபதி பதவியும் உள்@ராட்சித் தலைவர்களுக்கு உண்டு. ஆணையாளர் அல்லது செயலாளர்களின் நிர்வாக உதவியுடன் அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரம் அவர்களுக்கு உள்ளது.

மாநகர சபையாயின் மாநகர ஆணையாளரும், நகர சபையாயின் நகர ஆணையாளரும், பிரதேச சபையாயின் செயலாளரும் அரசாங்க பொதுச் சேவை அதிகாரிகளாக விளங்குவர். இப்பதவிகளுக்காகக் குறித்த சபை அமைந்துள்ள மாகாண சபை ஆளுநர் மற்றும் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமனங்கள் வழங்கப்படுகின்றன.

## உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரங்களும், பணிகளும்

கீழே தரப்பட்டுள்ள உரையாடலை வாசித்து அறிந்து கொள்ளுங்கள். அவற்றிலிருந்து உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள் பற்றிய தெளிவைப் பெறுவதற்கு முயற்சி செய்யுங்கள்.

அன்று புதன்கிழமை , மற்றைய தினங்களில் நேரத்தோடு வேலைக்குச் செல்லும் பழக்கத்தைக் கொண்ட சதீஷின் தந்தை அன்று வேலைக்குச் செல்லவில்லை. வீட்டில் இருந்தார். சதீஷுக்கு இது பெரு வியப்பாக இருந்தது.

**சதீஷ்** :- அப்பா! நீங்கள் இன்று வேலைக்குச் செல்லவில்லையா?

**தந்தை** :- இல்லை மகனே! நான் இன்று நகர சபைக்குப் போகவேண்டும்.

**சதீஷ்** :- கடந்த வாரமும் நகர சபைக்குப் போனீர்களே அப்பா?

**தந்தை** :- ஆம் ! அன்று வரிப்பணம் செலுத்தப் போனேன்.

**சதீஷ்** :- அப்படியானால் இன்றைக்கு ஏன் போகிறீர்கள்?

**தந்தை** :- இன்று எமது புதிய வீட்டு வரைபடத்திற்கு அனுமதி பெற்றுக் கொள்வதற்காகச் செல்கிறேன்.

**சதீஷ்** :- வீட்டு வரைபடத்துக்கும் நகரசபையின் அனுமதிபெற வேண்டுமா அப்பா?

**தந்தை** :- ஆம் மகனே! அதுதான் சட்டம். நகரசபையின் அனுமதியின்றி வீடு கட்டினால் அனுமதியற்ற கட்டடம் என்று சொல்லி அவற்றை உடைத்து அகற்றுவதற்கு நகரசபைக்கு அதிகாரமுள்ளது.

**சதீஷ்** :- ஏன் அப்பா! அனுமதி பெறவேணும் என்ற சட்டம் உள்ளது?

**தந்தை** :- அயலில் வசிப்பவர்களுக்கு பாதிப்பு இல்லாமலும், பாதைகளுக்கு தடைகளை ஏற்படுத்தாமலும், சுகாதாரமானதாகவும் வீடுகள் கட்ட வேண்டும். மலசலகூடங்கள், கிணறுகள் உரிய இடங்களில் அமைக்க வேண்டும். கழிவு நீர் செல்லுவதற்குப் பொருத்தமான வடிகால்கள் அமைக்க வேண்டும். அத்துடன் வீட்டுக்கு பதிவு இலக்கமும்

அவசியம். இதற்காகத்தான் அனுமதியைப் பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**சதீஷ்** :- இப்போதுதான் எனக்கு ஞாபகம் வருகிறது. அமிலவின் தந்தையும் போனவாரம் நீர் வசதி பெறும் அனுமதி பெறுவதற்காக நகரசபைக்குப் போனதாக அமில கூறினான். நீர் வசதி பெறவும் அனுமதி எடுக்க வேண்டுமா அப்பா?

**தந்தை** :- ஆம்! நகரசபை மூலம் நீர் பெறுவதாயின் நகரசபையிலுள்ள நீர்வழங்கல் பிரிவுக்கு விண்ணப்பிக்க வேண்டும். நீர்க்குழாய்களை பொருத்தும்போது பாதைகளை உடைக்க வேண்டுமாயின் அதற்குப் பணம் செலுத்த வேண்டும். நீர் வழங்கலுக்கு விண்ணப்பிப்பதற்கு வேறாகப் பணம் செலுத்த வேண்டும். அதன் பிறகு நகரசபை அதிகாரிகள் வந்து வேலைகளைத் திட்டமிட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வர்.

**சதீஷ்** :- அப்பா! வேறு என்னென்ன வேலைகள் நகரசபையினால் மேற்கொள்ளப்படுகின்றன?

**தந்தை** :- சிறுவீதிகளை அமைத்தல், அவற்றைப் பராமரித்தல், வீதிகளைத் துப்பரவு செய்தல், விளையாட்டு மைதானங்களை அமைத்தல், வாசிகசாலை நிறுவி நடத்துதல் போன்றவற்றையும் நகரசபை மேற்கொள்கிறது. மற்றைய உள்ளூராட்சி அமைப்புக்களும் அவ்வாறான பணிகளையே மேற்கொள்கின்றன.

கீழுள்ள அட்டவணையிலிருந்து உள்ளூராட்சி நிறுவனங்களது அதிகாரங் களையும் பணிகளையும் அறிந்து கொள்ளுங்கள்.

அட்டவணை 10.2 உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரமும், செயற்பாடும்

| அதிகாரம் | செயற்பாடு |
|---|---|
| ★ வரிகள், இறைகள் மற்றும் பல்வேறு வகையான அறவீடுகளை விதித்தல்<br>★ பொது வீதிகள், தெருக்கள், வாய்க்கால்கள், பாலங்கள், பொதுச்சந்தை, சிலைகள், சிற்பங்கள் நூல்நிலையங்கள் பூங்காக்கள் கட்டடங்கள் போன்றனவற்றில் உள்ள அதிகாரங்கள்<br>★ வீதி வரைபடங்கள் மற்றும் நிர்மாண வரைபடங்களை சான்றுப்படுத்தி விநியோகித்தல்<br>★ சுற்றாடலைப் பேணிப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைககளை மேற்கொள்ளல்<br>★ அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுதல்<br>★ சட்டவிரோத நிலையங்களை நடத்துதல் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளிலும் ஈடுபடுவோருக்கு எதிராக வழக்குத் தொடருதல்<br>★ சேரிகளையும், குடிசைகளையும் அகற்றுதல், சுகாதாரத்துக்குப் பங்கம் விளைவிக்கும் இடங்களை அழித்தல்<br>★ இயற்கை நீர் ஊற்றுகள், நீர் தேக்கங்கள் போன்றவற்றின் உரிமைகள் | ★ குப்பை கூழங்களை அகற்றுதல், சுகாதார மற்றும் சுத்திகரிப்பு செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.<br>★ பொது வீதிகள், வாய்க்கால்கள், பாலங்கள்,பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள், நூலகங்கள், மருந்தகங்கள் போன்றவற்றைக் கொண்டு நடத்தலும் பராமரித்தலும்.<br>★ நிலையான கட்டடங்களை நிர்மாணித்தல்,மற்றும் நிர்மாணங்கள் போன்றனவற்றுக்கு அனுமதி அளித்தல், அனுமதியற்ற கட்டட நிர்மாணங்களை அகற்றுதல்.<br>★ பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தலும் குடிநீர் வசதிகளை ஏற்படுத்தலும்.<br>★ பொதுத் தரிப்பிடம், பொது மலசலகூடம் போன்றவற்றை ஏற்படுத்தலும், கொண்டு நடத்தலும்.<br>★ நீர் விநியோகம், கழிவு நீர் வெளியேற்றம், நீர் வடிகால்கள், வாய்க்கால்கள், மயானம் தகனக் கிரியைகள் போன்றனவற்றைக் கொண்டு நடத்துதல்.<br>★ சுகாதாரத்திற்குப் பங்கம் விளைவிக்கும் பொருட்களை விற்பனை செய்வதைத் தடுத்தல்.<br>★ முன்பள்ளிகள், மகப்பேற்று நிலையங்கள், பிள்ளை பராமரிப்பு நிலையங்கள் போன்றவற்றை நடத்துதல்.<br>★ தீயணைப்புச் செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துதல். |

## உள்ளூராட்சி நிறுவனங்களின் நிதி நடவடிக்கைகள்

சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும், இயல்பாக நிதி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு நிதியம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. வருடத்திற்கு ஒரு முறை வரவு-செலவுத் திட்டமொன்றைத் தயாரித்துச் சபையில் நிறை வேற்றப்பட்டு நிர்வாக நடவடிக்கைகளுக்கும், அபிவிருத்தித் திட்டங்களுக்கும் ஏற்ப நடைமுறைப்படுத்தப்படுகின்றது. உள்ளூராட்சி நிறுவனங்களது நிதி பின்வரும் மூலங்களில் இருந்து கிடைக்கப்பெறுகிறது.

1. சட்டதிட்டங்களுக்கு அமைய அறவிடப்படும் வரிப்பணங்கள், குத்தகை வருமானங்கள், இறைகள் மற்றும் வேறு அறவீடுகளின் மூலம் கிடைக்கப்பெறும் நிதி.
2. சட்டங்களை மீறியமை தொடர்பாக மாகாணசபைக்கு உட்பட்ட மஜிஸ்ரேட் நீதிமன்றத்தின்மூலம் விதிக்கப்படும் தண்டப்பணங்கள்.
3. படகுச்சேவை வாகனசேவை, திரையரங்குகள் என்பவற்றிலிருந்து அறவிடுகள் பணங்கள், முத்திரைக் கட்டணங்கள் என்பவற் றிலிருந்து.
4. உள்ளூராட்சி அமைச்சர் மூலமாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்படும் சாதாரண மற்றும் விசேட நிதி ஒதுக்கீடுகள்.
5. உள்ளூராட்சி மன்றத்துக்குச் சொந்தமான சொத்துக்கள், உடைமைகள் என்பவற்றை விற்பதன் மூலம் அல்லது குத்தகைக்கு வழங்குவதன் மூலம் கிடைக்கும் நிதி வருமானங்கள். (நகர மண்டபம், கடைத் தொகுதிகள்)
6. உள்ளூராட்சி மன்றத்துக்குச் சொந்தமான சொத்துக்கள் மற்றும் பொதுச் சேவைகள் வழங்கல் மூலம் கிடைக்கும் நிதி வருமானங்கள், (இடம்,கட்டடம், விளையாட்டரங்கு போன்றவற்றை வாடகை மற்றும் குத்தகைக்கு விடல்)
7. பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானம் அல்லது சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்படும் மானியங்கள்.
8. உள்ளூராட்சி சபையின் அதிகாரத்தைச் செயற்படுத்தும்போது அல்லது பணியாற்றும் போது அறவிடப்படும் கட்டணங்கள்.
9. மயானங்கள், நூதனசாலை, பூங்கா, வாகனத்தரிப்பிடங்கள் போன்ற வற்றில் அறவிடப்படும் வருமானங்கள்.
10. மாகாணசபைமூலம் ஒதுக்கப்படும் நிதி.

இவ்வாறு கிடைக்கப்பெறும் நிதி உள்ளூராட்சி மன்றத்தின் பெயரில் அனுமதிக்கப்பட்ட வங்கி ஒன்றில் வைப்புச் செய்யப்படுகிறது. சட்டதிட்ட விதிகளுக்கு அமைய இவற்றிலிருந்து நிதி பெற்றுச் செலவிடப்படல் வேண்டும். பின்வரும் சந்தர்ப்பங்களின்போது இந்த நிதி செலவு செய்யப்படலாம்.

1. உள்@ராட்சி நிறுவனத்திற்குரிய சட்டதிட்டங்களைச் செயற்படுத்துவதற்கு
2. சபைக்குச் சொந்தமான சொத்துக்களுக்கான காப்புறுதித் தவணைக் கட்டணங்களைச் செலுத்துவதற்கு
3. சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளின் செயற்றிட்டங்களுக்கு
4. திடீர் அனர்த்தம் மற்றும் ஆபத்துக்கள் போன்றவற்றுக்கு
5. ஊழியர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்கு
6. பொது முக்கியத்துவம் வாய்ந்த சமய, கலாசார, சுகாதார, பொழுதுபோக்கு கல்விப் பணிகள் போன்றவற்றுக்கு
7. உள்@ராட்சி நிறுவனத்தின் மக்கள் பிரதிநிதிகள், அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோருக்கான கொடுப்பனவுகள் போக்குவரத்துச் செலவுகள் மற்றும் கூட்டங்களுக்கான கொடுப்பனவுகள் என்பவற்றைச் செலுத்துவதற்கு.

## 10.6 உள்ளூராட்சி நிறுவனங்களின் சேவைகள் தொடர்பான பொறுப்புக்களும் கடமைகளும்

உள்@ராட்சி அமைப்புகளின் மூலம் மக்களின் நலன்களுக்காகவும் முறையான நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்காகவும் பல்வேறு பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுகின்றன என்பதை இதுவரை இப்பாடத்தைக் கற்றதிலிருந்து விளங்கிக் கொண்டிருப்பீர்கள். மக்கள் பிரதிநிதிகள், அதிகாரிகள், மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் நெருங்கிய தொடர்பினால் இத்தகைய சேவைகளை மேற்கொள்வதற்கு முடிகிறது. சேவைகளைப் புரிதல், அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல், வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற பணிகளில் இருந்து உள்@ராட்சி நிறுவனப் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகள் மூலமும் சேவைநாடிகளான மக்களின் மூலமும் மேற்கொள்ளப் படவேண்டிய உரிமைகளும் கட்டமைப்பு பொறுப்புக்களும் ஏராளம் உண்டு. அவற்றில் முக்கியமானவை கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 10.3 சேவை பெறுவோரின் (பொது மக்களின்) பொறுப்புக்களும், கடமைகளும்

| பொறுப்புக்கள் | கடமைகள் |
|---|---|
| ★ பொதுச் சொத்துக்களையும் பொது இடங்களையும் பாதுகாத்தல் | ★ பொதுச்சேவைகள் தொடர்பாக அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கல் |
| ★ சட்டங்களுக்கும், விதிகளுக்கும் கட்டுப்படுதல் | ★ உரிய வேளையில் வரிகளையும் கொடுப்பனவுகளையும் செலுத்துதல் |
| ★ உரிய முறையில்சேவைகளையும், வசதிகளையும் அனுபவித்தல் | ★ குப்பை, கூழங்களை உரிய முறையில் அகற்றுதல் |
| ★ முறையற்ற விதத்தில் வசதிகளை அனுபவிப்போர் பற்றி உரியவர் களுக்கு அறியத் தருதல். | ★ பொதுச் சொத்துக்களைக் கவனமாக கையாளுதல் |
| ★ அனுமதியற்ற கட்டட நிர்மாணங்களைச் செய்யாதிருத்தல் | ★ தேவைகளை நிறைவேற்றுவதற்கு சட்டரீதியான வழிமுறைகளைப் பயன்படுத்துதல் |
| ★ நிர்மாணங்களுக்காக உரிய அனுமதியைப் பெறல் | ★ பாதைகளையும் பொது இடங் களையும் துஷ்ப்பிரயோகம் செய் யாதிருத்தல். |

## செயற்பாடு III

உள்@ராட்சி நிறுவனங்களின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பாக, பாடசாலை மாணவர் எனும் அடிப்படையில், உங்களால் வழங்கப்படக் கூடிய பங்களிப்புக்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

### சாராம்சம்

- உள்ளூராட்சி அமைப்பு என்பது மக்கள் பயன் பெறும் வகையான சேவைகளை மேற்கொள்வதற்காக மத்திய அரசாங்கத்தின் சட்டத்தின் மூலம் உருவாக்கப்படுகின்ற மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகள் ஆகியோரை உள்ளடக்கிய அரசியல் மற்றும் நிர்வாகப் பண்புகளை வெளிப்படுத்தக்கூடிய நிறுவனத் தொகுதி ஆகும்.
- இலங்கையில் உள்ளூராட்சி அமைப்புக்கள் என்றவகையில் தற்போது மாநகரசபைகள், நகரசபைகள், மற்றும் பிரதேச சபைகள் எனும் மூன்று வகையான அமைப்புக்கள் காணப் படுகின்றன.
- பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டு மக்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு உள்ளூராட்சி நிறுவனம் துணைபுரிகின்றது.
- உள்ளூராட்சி மன்றங்களுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பது தொடர்பாக விகிதாசாரப் பிரதிநிதித்துவப் பட்டியல்முறை பயன் படுத்தப்படுகிறது.
- உள்ளூராட்சி மன்றங்களுக்கு மத்தியில் நிறுவன அமைப்பு, பதவிகள் மற்றும் அதிகாரங்கள் தொடர்பில் ஒற்றுமைகளும், வேற்றுமைகளும் உள்ளன.
- உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களும் பணிகளும் என்னென்ன என்பது உரிய சட்ட ஏற்பாடுகளின் மூலம் தெளிவுபடுத் தப்பட்டுள்ளது.
- அரசியல் பிரதிநிதிகள், நிர்வாக அதிகாரிகள் மற்றும் மக்கள் எனும் மூன்று தரப்பினரும் தத்தமது பொறுப்புக்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்றும்போது நிர்வாகம் இலகுவாக்கப்படக் காரணமாகின்றது.
- நாட்டினுள் சிறந்த நிர்வாகமொன்றைக் கொண்டுவருவது தொடர்பில் உள்ளூராட்சி நிறுவனங்கள் மிகப் பிரதானமான பங்கினை ஆற்றுகின்றன.

### ஒப்படை

நாட்டில் ஒரு சிறந்த நிர்வாகத்தை செயற்படுத்துவதற்காக உள்ளூராட்சி நிறுவனங்களின் பங்களிப்பு அவசியமாகும் / அவசியமில்லை

மேலேயுள்ள தலைப்பின் கீழ் வகுப்பு மாணவர்களிடையே விவாத மொன்றை நடாத்துங்கள்.